பக்கங்கள்:-16

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | மார்கழி 26 | வெள்ளிக்கிழமை | 10.01.2025 | அதிர்வு 161

## மண்ணெண்ணெய் அருந்திய ஒரு வயது குழந்தை மரணம்!

### யாழ்ப்பாணத்தில் சோகம்

(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணம் – கோப்பாய் பகுதியில் நேற்று ஒரு வயதும் இரண்டு மாதங்களும் நிரம்பிய ஆண் குழந்தை 05




# தெற்கில் தமிழர்கள் குடியேறிகள் அல்லர்

## அவர்கள் பூர்வீகக் குடிகள் என்று நாடாளுமன்றில் சிறீதரன் முழக்கம்

"தேசிய மக்கள் சக்தி முதலில் தமது தரப்பினருக்கு வரலாற்றைக் கற்றுக்கொடுக்க வேண்டும். புத்தளம், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் தமிழர்கள் பூர்வீகக் குடிகளாகவே வாழ்ந்தனர். அதேபோல் கொழும்பு, கறுவாத் தோட்டம், கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளில் தமிழர்கள் பூர்வீகக் குடிகளாகவே வாழ்ந்தனர். பிற்பட்ட காலத்தில் நீர்கொழும்பு பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் சிங்களவர்களாக மாற்றம் பெற்றார்கள். இதுதான் உண்மை."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 05

## கலவரத்தைத் தூண்ட முயற்சிப்போருக்கு சிறைதான் வாழ்க்கை

### பிரதமர் திட்டவட்டம்



"இலங்கையில் இனிமேல் இன, மத அவமதிப்புகளுக்கு – வன்முறைகளுக்கு – கலவரங்களுக்கு இடமேயில்லை." 06

## ஜெனரல் சவேந்திர சில்வாவினுடைய அலுவலகத்துக்கு நிரந்தர மூடுவிழா!



பாதுகாப்புப் படைகளின் முன்னாள் பிரதானி சவேந்திர சில்வாவின் அலுவலகம் உத்தியோகபூர்வமாக மூடப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக இருந்த ஜெனரல் சவேந்திர சில்வா, கடந்த டிசம்பர் 31 ஆம் திகதியுடன் ஓய்வுபெற்றிருந்தார். பாதுகாப்புப் படைகளின் பிரதானி பதவியை முற்றாக ஒழிப்பதற்குப் புதிய அரசு தீர்மானித்திருக்கும் நிலையில், இதுவரை அந்தப் பதவிக்கு யாரும் நியமிக்கப்படவில்லை.

இந்நிலையில் 06




பௌத்த மதத்தின் பெயரால் தொடர்ந்து அடாவடித்தனமும் அட்டகாசமும் பண்ணி வந்து பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் மீண்டும் கம்பி எண்ணுவதற்குச் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்.

தமது தொடர் அட்டகாசங்களுக்கு சரியான படிப்பினையை அவர் படிக்கும் காலம் வந்திருக்கிறது.

மற்றைய மதங்களுக்கு – குறிப்பாக இஸ்லாமிய மதத்திற்கு – எதிராக மிக மட்ட ரகமான கருத்துக்களை வெளியிட்டு வந்த ஞானசார தேரர், அப்படி மற்றைய மதங்களை இழிவுபடுத்தும் அராஜகத்தை ஓர் அட்டகாசமான அடாவடித்தனமாகவே தொடர்ந்தும் வந்தார். அதன் விளைவை அவர் அனுபவிக்கத் தொடங்கி இருக்கிறார்.

இந்த விடயத்திலாவது சட்டம் தனது கடமையைச் சரிவர ஆற்றுவது வரவேற்கத்தக்கது.

மதரீதியான அட்டகாசத்துக்காகவும் நீதிமன்ற அவமதிப்புக்காகவும் அவர் சிறை செல்லும் மூன்றாவது சம்பவம் இதுவாகும். 05



# கைதான 10 இந்திய மீனவர்களுக்கும் ஜனவரி 23 ஆம் திகதி வரை மறியல்!

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்ட 10 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இலங்கைக் கடற்படை மற்றும் கடலோரக் காவல் படையினர் நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் – காரைநகர், கோவளம் கலங்கரை விளக்கத்தில் நடத்திய விசேட நடவடிக்கையின்போது இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த இந்திய மீன்பிடிப் படகைக் கைப்பற்றியதுடன் 10 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ். கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுப் பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார்.

# அரிசி இறக்குமதிக்கான அனுமதி இன்றுடன் நிறைவடைகின்றது



நாட்டில் நிலவும் அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில் அரிசி இறக்குமதிக்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட அனுமதி இன்றுடன் நிறைவடையவுள்ளது.

அரிசித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் அரிசி இறக்குமதிக்காகக் கடந்த செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியிருந்தது.

இந்தநிலையில், அரசாங்கத்தினால் அரிசி இறக்குமதிக்காக வழங்கப்பட்ட கால அவகாசம் போதாமையினால் இன்று வரை அரிசி இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதன்படி, நேற்று முன்தினம் மாத்திரம் 115,000 மெற்றிக் தொன் அரிசி விடுவிக்கப்பட்டுள்ளதாக இலங்கைச் சுங்கம் தெரிவித்துள்ளது.

அதில் 45,000 மெற்றிக் தொன் சிவப்பு பச்சையரிசியும், 70,000 மெற்றிக் தொன் புழுங்கல் அரிசியும் விடுவிக்கப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# வன்முறைக் கும்பல் வீடு புகுந்து அராஜகம்

## எட்டு வயது சிறுமி வைத்தியசாலையில்

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

மதுரங்குளி, ஸ்ரீமாபுரம் பத்தாம் கட்டைய எனும் கிராமத்தில் வீடு ஒன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

மது போதையில் வந்த மேற்படி குழுவினர் வீட்டில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளமையுடன் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோவையும் சேதப்படுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது எட்டு வயது சிறுமி ஒருவர் காயம் அடைந்த நிலையில் புத்தளம் தள வைத்திசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி கேள்வியுற்ற புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம். பைஸல் சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து தாக்குதல் சம்பவம் பற்றி கேட்டறிந்துடன் உடனடியாக மதுரங்குளி பொலிஸாருடன் தொடர்பு கொண்டு விசாரணை மேற்கொண்டு தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்ற குழுவினரை கைது செய்யுமாறு வேண்டிக் கொண்டதுடன் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் பணிப்புரை விடுத்தார்.

மேற்படி வன்முறைக் குழுவினர் இதற்கு முன்பும் இந்தக் கிராம மக்களை இவ்வாறு தாக்கியும் அச்சுறுத்தியும் வந்துள்ளமை பற்றியும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் மக்கள் முறையிட்டமையும் குறிப்பிடத்தக்கது.









# பெரும்போகத்திற்கான நிதியுதவியின் 2 ஆம் கட்டம் விரைவில் வழங்கப்படும்

## பிரதமர் ஹரிணி தெரிவிப்பு

பெரும்போகத்திற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படும் 25,000 ரூபா நிதியுதவியை இரண்டு கட்டங்களாக வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு உர மானியங்களை வழங்கும் அரசாங்கத்தின் திட்டம் தொடர்பில் நாடாளுமன்றில் நேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"விவசாயிகளுக்கான 25,000 ரூபா கொடுப்பனவு இரண்டு கட்டங்களாக வழங்கப்படுகின்றன.

முதல் கட்டத்தில் 15,000 ரூபா ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதுடன், இரண்டாம் கட்டத்தில் 10,000 ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

அத்துடன், விவசாயிகளின் உரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய ஒரு நேர்மறையான மற்றும் முறையான அமைப்பை செயல்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அதற்காக விவசாய அமைப்புகளிடமிருந்து யோசனைகள் கோரப்பட்டு வருகின்றன.

நிதி உதவிகளுக்கு மேலதிகமாக அரசாங்கம் தற்போது 25,239.73 மெற்றிக் தொன் பொட்டாசியம் குரியேட்டு உரத்தை இலவசமாக வழங்கத் திட்டமிட்டுள்ளது."– என்றார்.

# கொழும்பு பங்குச் சந்தையின் விலைச் சுட்டெண் மேலும் சரிவு



கொழும்பு பங்குச் சந்தையின் விலைச் சுட்டெண் நேற்று மேலும் சரிவைச் சந்தித்தது.

அதனடிப்படையில், அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 142.65 புள்ளிகளால் சரிவடைந்தது.

அந்தவகையில், கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்துப் பங்குகளின் மொத்த விலைச் சுட்டெண் நேற்று 15,811.36 புள்ளிகளாகப் பதிவாகியது.

அதன்படி, கொழும்பு பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வானது இன்றையதினம் 4.1 பில்லியன் ரூபாவாக பதிவாகியது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டமை தொடர்பான நீதிமன்றம் விசாரணை அமர்வுகளுக்கு மத்தியில் புகுந்து அடாவடித்தனம் பண்ணியமைக்காக அவருக்கு முதல் தடவையாக சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பிரகீத் எக்னெலிகொடவின் மனைவிக்கு ஐம்பதாயிரம் ரூபா செலுத்தும்படியும் அவர் பணிக்கப்பட்டார். நீதிமன்ற உத்தரவில் சிறைக்குச் சென்ற அவர் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

அச்சமயத்தில் 'கடிநாய் ஒன்று கூண்டிலிருந்து திறந்து விடப்படுகின்றது. சமூகம் அவதானமாக இருக்க வேண்டும்' – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பின்னர் ஞானசார தேரருக்கு இஸ்லாமிய மதத்தை நிந்தித்தமைக்காக நாலு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அதற்கு எதிராக ஞானசார தேரர் மேன்முறையீடு செய்த நிலையில் அந்த வழக்கில் சிறைத் தண்டனை அனுபவித்த அவர் மேன்முறையீட்டின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

இப்போது இஸ்லாம் மதத்தை நிந்தித்த மற்றொரு குற்றச்சாட்டில் ஒன்பது மாத சிறைத் தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டிருக்கின்றது இந்தச் சிறைத் தண்டனை விதிப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் நிலையில் அவர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனு நிராகரிக்கப்பட்டிருக்கின்றது.

இவற்றுக்கிடையில் கொழும்பு பம்பலப்பிட்டியில் ஒரு பெண்மணிக்குச் சொந்தமான 10 கோடி ரூபா பெறுமதியான அடுக்குமாடி குடியிருப்பு வீடு ஒன்றைப் பலவந்தமாக அச்சுறுத்திப் பிடுங்கிக் கைப்பற்றிய குற்றச்சாட்டில் உடனடியாக அந்த வீட்டை சம்பந்தப்பட்ட பெண்ணிடம் திரும்பி வழங்குமாறு நீதிமன்றம் அவருக்கு கடுமையான உத்தரவை அண்மையில் வழங்கியிருந்தது.

இத்தகைய தொடர் குற்றவாளியைத்தான் தம்முடைய அரசில் ஜனாதிபதி செயலணி ஒன்றின் தலைவராக நியமித்து அரசியல் அடாவடித்தனம் பண்ணியிருந்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அரசியல் பின்பலங்களோடு சட்டத்தைத் துச்சமாக மதித்து, அடாவடித்தனம் பண்ணுவோரின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதற்கு ஞானசார தேரர் இப்போது பெற்றுக்கொண்டுள்ள 'ஞானம்' நல்ல முன்னுதாரணம் – படிப்பினை – என்று நினைக்கிறேன்.

---

## தெற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பொருட்களின் விலையேற்றம், தட்டுப்பாடு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கான நலன்புரித் திட்டங்கள் மீள்பரிசீலனை செய்யப்பட வேண்டும். தகுதி வாய்ந்த தரப்பினருக்கு நலன்புரிக் கொடுப்பனவுகள்கிடைக்கப்பதில்லை.கிளிநொச்சி மாவட்டம் உட்பட பெரும்பாலான மாவட்டங்களில் இவ்வாறான நிலையே காணப்படுகின்றது. இதனால் நலன்புரிக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள்.

நலன்புரிக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்றவர்களாக உள்ள செல்வந்தர்களுக்குக் கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறுகின்றன. ஆகவே, நலன்புரித் திட்டம் மறுபரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ளவர்களுக்குநிவாரணக்கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும்.

பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரத்துக்காக மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். மலையக மக்களின் வாழ்க்கை என்றும் பாதிக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. உலக வரைபடத்தில் இன்றும் லயன் அறைகளில் வாழும் மக்கள் சமூகமாகவே எம் மலையகச் சகோதரர்கள் உள்ளார்கள்.

100 -200 மீற்றர் லயன் அறை தொகுதியில் தார் பூசிய தகரக் கூரைகளினால் அமைக்கப்பட்ட அறைகளில்தான் இன்றும் எம் மலையக மக்கள் உரிய அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிள் வாழ்கின்றார்கள். சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொண்டு இந்த மக்களுக்குத் தரமான சொந்த வீடுகளை நிர்மாணித்துக் கொடுத்தால் இந்த அரசு வரலாற்றில் இடம்பிடிக்கும். இந்த மக்களுக்காக எடுக்கும் திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகள் கடந்த காலங்களில் முறையாக கிடைக்கப் பெறவில்லை. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 8 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு 1 முதல் 3 இலட்சம் ரூபா வரையில் மீள்குடியேற்ற தொகை வழங்கப்பட்டது. இருப்பினும் ஒருசிலருக்கு இந்த நிதி கிடைக்கப்பெறவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் 38 ஆயிரம் தமிழர்கள் மீள்குடியமர்த்தப்பட்ட நிலையில் அவர்களில் 11 ஆயிரத்து 790 பேருக்கு மீள்குடியேற்ற தொகை வழங்கப்பட்டது. மிகுதி 26 ஆயிரத்து 209 பேருக்கு இன்றும் அந்தத் தொகை வழங்கப்படவில்லை. மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்க–ளில் மீள்குடியமர்த்தப்பட்டவர்களுக்கு இன்றுவரை இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவில்லை.

மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் இந்தத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பப் படிவங்களை நிரப்பியே அதிகளவில் நிதியைச் செலவு செய்துள்ளார்கள். ஆகவே, இந்த அரசு இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்த வேண்டும். கிராம சேவகர் பிரிவுகள் ஊடாக இந்த நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து அரசு கவனம் செலுத்தியுள்ளமை கவனத்துக்குரியது. இந்த அரசுக்குப் பெரும்பான்மைப் பலம் உள்ளது. அனைத்து இன மக்களும் இந்த அரசில் பங்குதாரர்களாக உள்ளனர். ஆகவே, அரசியல் தீர்வு விவகாரம் குறித்து அரசு விசேட கவனம் செலுத்த வேண்டும். தீர்வுத் திட்டத்தில் அரசு சிறந்த தீர்மானத்தை எடுத்தால் சிங்கள மக்களும் ஆதரவளிப்பார்கள். ஏனெனில் சிங்கள மக்களும் தற்போது நேர்மனப்பான்மையில் உள்ளார்கள்.

அரசு சிறந்த முறையில் செயற்பட்டாலும் ஒருசில துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெறுகின்றன. பெரியநீலாவணை பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடளிக்கச் சென்ற பெண் மிகக் கொடூரமான முறையில் பொலிஸாரினால் தாக்கப்பட்டுள்ளார். இந்த நாட்டில் என்ன நடக்கின்றது? இந்த விடயம் தொடர்பில் அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் தமக்குக் காணிகள் வேண்டும் என்று பாணந்துறை, கொழும்பு பகுதிகளில் வாழும் சிங்களவர்கள் குறிப்பிட்டுள்ளனர் என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன. இலண்டனில் உள்ள ஒருவர் தன்னைத் தேசிய மக்கள் சக்தியின் ஊடக இணைப்பாளர் என்று குறிப்பிட்டுக் கொண்டு புத்தளம், நீர்கொழும்பு, சிலாபம், கொழும்பு, வத்தளை, வெள்ளவத்தை மற்றும் கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளில் வாழும் தமிழர்கள் அந்தப் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மக்கள் சக்தி முதலில் இந்த நபருக்கு வரலாற்றைக் கற்றுக்கொடுக்க வேண்டும். புத்தளம், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் தமிழர்கள் பூர்வீகக் குடிகளாகவே வாழ்ந்தனர். அதேபோல் கொழும்பு, கறுவாத்தோட்டம், கொள்ளுப்பிட்டி ஆகிய பகுதிகளில் தமிழர்கள் பூர்வீகக் குடிகளாகவே வாழ்ந்தனர். பிற்பட்ட காலத்தில் நீர்கொழும்புப் பகுதியில் வாழ்ந்த தமிழர்கள் சிங்களவர்களாக மாற்றம் பெற்றார்கள். இதுதான் உண்மை.

1970, 1983 மற்றும் 1985 ஆகிய காலப்பகுதிகளில் அநுராதபுரம் பகுதியில் வாழ்ந்த 22 ஆயிரம் தமிழர்கள் ஒரே இரவில் சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். அதேபோல் 1983 ஆம் ஆண்டு மலையகத்தில் இருந்து 2 ஆயிரம் எம் சகோதரர்கள் வெளியேற்றப்பட்டார்கள். அவர்கள் இன்று சொந்த இடங்கள் ஏதும் இல்லாமல் பல்வேறு இடங்களில் வாழ்கின்றார்கள். அவர்களையும் மீள்குடியேற்றம் செய்யுங்கள்." – என்றார்.

---

## மண்ணெண்ணெய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்று மண்ணெண்ணெய் அருந்திய நிலையில் உயிரிழந்துள்ளது.

கோப்பாய் மத்தி, கோப்பாய் பகுதியைச் சேர்ந்த தர்சிகன் சஸ்வின் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

நேற்று மதியம் தாயார் சமையல் செய்துகொண்டு இருந்தவேளை மேற்படி குழந்தை மண்ணெண்ணெய்யை எடுத்துக் குடித்துவிட்டு, உடலிலும் பூசிவிட்டு விளையாடிக்கொண்டிருந்ததது. இதை அவதானித்த தாயார் குழந்தையைத் தூக்கினார். அப்போது குழந்தை மயக்கமடைந்தது.

பிற்பகல் ஒரு மணியளவில் அந்தக் குழந்தை கோப்பாய் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் பிற்பகல் 4 மணியளவில் உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



# இன்றிலிருந்து பலத்த மழை

நாட்டில் இன்றிலிருந்து மழையுடனான காலநிலை அதிகரிக்கும் சாத்தியம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன்படி, வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில இடங்களிலும் இவ்வாறு மழை பெய்யக்கூடும்.

மேற்படி பகுதிகளில் 75 மில்லி மீற்றர் வரையான பலத்த மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வடக்கு, வடமத்திய, மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் காற்றானது, மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வேகத்தில் அதிகரித்து வீசக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# முல்லைத்தீவில் துப்பாக்கிச்சூடு! குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம்!!



முல்லைத்தீவு – கூழாமுறிப்புப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமுற்று மாஞ்சோலை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான், கூழாமுறிப்பைச் சேர்ந்த 46 வயதுடைய குடும்பஸ்தரே படுகாயமடைந்துள்ளார்.

கூழாமுறிப்புப் பகுதியில் மச்சானுக்கும் அத்தானுக்கும் இடையில் ஏற்பட்ட மனகசப்பு கைக்கலப்பாக மாறியுள்ளது. அதனையடுத்து, கோபடைந்த மச்சான் கத்தியால் அத்தானை வெட்டியுள்ளார். அது பலனளிக்காத நிலையில் காட்டுக்குள் சென்று இரண்டு இடியன் துப்பாக்கிகளை எடுத்து வந்து அத்தானை நோக்கி அவர் சுட்டுள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த அத்தான் மாஞ்சோலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 24 வயதுடைய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார். சந்தேகநபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஒட்டுசுட்டான் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

## கலவரத்தைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

"இங்கு இன, மத வன்முறைகளை – கலவரங்களை மீண்டும் தூண்ட முயல்வோர் தொடர்ந்து சிறைகளில் அடைக்கப்படுவார்கள்." – என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார்.

"எவராக இருந்தாலும் குற்றமிழைத்தவர்கள் சட்டத்தின் பிரகாரம் தண்டிக்கப்படுவார்கள்." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

"அப்படியானவர்களுக்கு நீதிமன்றம் வழங்கும் தண்டனையை தேசிய மக்கள் சக்தி அரசு வரவேற்கும்." – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இஸ்லாம் மதத்தை அவமதித்த குற்றத்துக்காகப் பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு 9 மாத சிறைத்தண்டனையை கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விதித்துள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று பிரதமரிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## ஜெனரல் சவேந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சவேந்திர சில்வா, பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக பணியாற்றிய காலத்தில் பயன்படுத்திய அலுவலகம் தற்போது மூடப்பட்டுள்ளது.

அங்கு பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் சவேந்திர சில்வாவின் பாதுகாப்புக்கு இணைக்கப்பட்டிருந்த இராணுவத்தினர் ஆகியோர் தற்போது அவரவர் பணியாற்றும் சொந்த இராணுவ ரெஜிமண்டுகளுக்கு மீளத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.



# நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

2025ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டு சட்டமூலம் எனப்படும் வரவு செலவுத் திட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

பிரதமர் ஹரினி அமரசூரிய இதனை முன்வைத்தார்.

நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு தொடர்பான உரை எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதன்பின்னர் நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூல இரண்டாம் மதிப்பீடு தொடர்பான உரை மீதான விவாதம் அடுத்த மாதம் 18 முதல் 25 ஆம் திகதி வரை தொடர்ச்சியாக 7 நாள்களுக்கு நடத்தப்படவுள்ளது.

இதனையடுத்து, அன்றைய தினம் அதாவது பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு சபையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பெப்ரவரி 27 முதல் மார்ச் 21 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு எனப்படும் குழுநிலை விவாதம் நடத்தப்படவுள்ளது.

வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு மார்ச் 21ஆம் திகதி பிற்பகல் சபையில் இடம் பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்காக புதிதாக வேட்புமனுக்களைக் கோருவதற்காக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் விசேட ஏற்பாடுகள் சட்டமூலமும் நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# மலையகத்தில் வறுமை அதிகரித்துச் செல்கின்றது

"இலங்கையைப் பொருத்தவரையில் மலையகத்தில் வறுமை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. சம்பளத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு வறுமை மலையகத்தில் நிலவவில்லை. அது பல்வகைத்தன்மையுடையது."

– இவ்வாறு என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கை என்ற தீவுக்குள்ளே இருக்கும் ஓர் தீவாக மலையகம் திகழ்கிறது.

இலங்கையில் உள்ள மிகவும் பின்தங்கிய மக்களாக பெருந்தோட்ட மக்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

உணவு பாதுகாப்பின்மையை எதிர்நோக்கி வாழக்கூடிய மக்களாக பெந்தோட்ட மக்களை உணவு பாதுகாப்பு நிறுவனம் அடையாளப்படுத்தியுள்ளது.

இதே போன்று இலங்கை செஞ்சிலுவை சங்கம் மற்றும் உலக செஞ்சிலுவை சங்கத்தின் அறிக்கையும் மலையக மக்கள் பின்தங்கிய நிலையில் உள்ளதை வெளிப்படுத்துகிறது.

இதனிடையே தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளமாக 2,000 ரூபாயை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும் ." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பண்பாட்டுப் படுகொலை

நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்டவர்களின் 51ஆவது நினைவு தினம் இன்றாகும்.

யாழ்ப்பாணத்தில் 1974ஆம் ஆண்டு நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10ஆம் திகதி, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டின் விளைவாக அப்பாவிப் பொது மக்கள் பத்துப் பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

'ஓர் இனத்தை அழிக்குமுன் அதன் சுவடுகளை அழி, அடையாளத்தை அழி!' என்பதே எதிரிகளின் போருபாயமும், பேருபாயமும், தந்திரமுமாகும். இனவழிப்பின் அடிப்படைக் கோட்பாடே இதுதான்.

இலங்கைத் தீவில் தமிழ்த் தேசியத் தாயகத்தையும், தமிழினத்தையும் நிரந்தரமாக அடிமைப்படுத்தி, தமிழினத்தின் தாயக உரித்தை நிர்மூலமாக்கக் கங்கணம் கட்டிச் செயற்படும் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாதிக்கம் அதற்கு வகுத்துக் கொண்ட பிரதான தந்திரோபாயம் தமிழினத் தனித்துவத்தை இலக்கு வைத்து அழிப்பதுதான்.

இந்த வரலாற்றுத் தாயகத்தில் தமிழர் தேசத்தின் நீட்சியை - உரித்தை - நிலைத்த உண்மையை - தனித்துவத்தை - ஆய்வியல் ரீதியில் உறுதிப்படுத்தும் ஒரு சர்வதேச நிகழ்வை தமிழர் தாயகம் பேரெழுச்சியுடன் முன்னெடுப்பதைத் தாங்கிக் கொள்ள முடியாத சிங்களப் பேரினவாதம் அதற்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்ட ஈனத்தனமான தாக்குதலின் விளைவே இந்த பத்துப் பேரின் படுகொலையுமாகும்.

ஒரு வகையில் இது பண்பாட்டுப் படுகொலையும் கூட.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி தினமான ஜனவரி 10, 1974 இல் - மாநாட்டின் முத்தாய்ப்பாக நடைபெற்ற நிகழ்வில் - திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் மீது சிங்களப் பொலிஸாரினால் இந்தக் கொடூரம் அரங்கேற்றப்பட்டது.

பொலிஸாரின் தேவையேயற்ற துப்பாக்கிச் சூட்டினால் மின்கம்பிகள் அறுந்து மக்கள் திரண்டிருந்த இடத்தில் விழுந்தமை, ஆயிரக்கணக்கில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எனத் திரண்டிருந்த தமிழ் மக்கள் மத்தியில் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியமை, இரவு நேரத்தில் ஏற்பட்ட இக்குழப்பத்தினால் நிகழ்ந்த விபத்துகள் மற்றும் களேபரங்களினால் இந்த அவல உயிர்ச்சாவுகள் நேர்ந்தன.

சர்வதேச ரீதியில் முக்கியத்துவம் பெற்றிருந்த இந்த மாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்தவிடாமல் அப்போதைய சிறிமாவோ பண்டார நாயக்க தலைமையிலான அரசு தடுத்து வந்தது. அரச நிர்வாகத் துறையையும், பொலிஸையும் பயன்படுத்தி முட்டுக்கட்டைகளைப் போட்டது. பொலிஸாரை அனுப்பி கலவரத்தை ஏற்படுத்தியது.

தங்கள் இனம் சார்ந்த ஓர் எழுச்சி மாநாட்டை பேரினவாத அடக்குமுறைப் போக்கில் பொலிஸாரை ஏவி விட்டு, களேபரத்தை ஏற்படுத்தி, படுகொலைக் கொடூரத்தை கட்டவிழ்த்து விட்ட சிங்கள பேரினவாதத்தின் இந்த நடவடிக்கை தமிழர் தேசத்தின் ஆன்மாவில் பெரும் வடுவாக - நீங்காத காயமாக - ஆழமான ரணமாக - பதிந்தது.

பிற்காலத்தில் தமிழர் தேசம் தங்கள் விடுதலைக்காக எண்ணிப் பார்க்க முடியாத தியாகத்துடனும் உயிர் ஈகத்துடனும் தீவிரமான ஆயுதப்போராட்டத்தைமுன்னெடுப்பதற்கான வித்து - சிந்தனைக் கரு - இந்தக் கொலைவெறி தாண்டவத்தின் மீதே கட்டவிழ்ந்து பிறப்பாக்கம் பெற்றது என்பது வரலாறு.

இத்தகைய பண்பாட்டு படுகொலை கொடூரங்களின் விளைவையே அடுத்த மூன்று தசாப்த காலங்களுக்கு பேரழிவு தரும் யுத்தமாக இலங்கைத் தீவு எதிர்கொண்டது என்றால் அது உண்மைதான்.





# மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் இருவர் சத்தியப்பிரமாணம் செய்தனர்

இரண்டு புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்னிலையில் நேற்று சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர்.

சட்டத்தரணி கே.எம்.எஸ். திஸநாயக்க மற்றும் சட்டத்தரணி ஆர்.பி. ஹெட்டிஆராய்ச்சி ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி பிரதீப் ஹெட்டிஆராய்ச்சி இதற்கு முன்னர் வர்த்தக மேல் நீதிமன்றத்தின் நீதிபதியாகசெயற்பட்டுள்ளமையுடன் சட்டத்தரணி கே.எம்.எஸ். திஸநாயக்க கண்டி மேல் நீதிமன்ற நீதிபதியாக செயற்பட்டுள்ளார்.





## கல்கிசை துப்பாக்கிச்சூடு:

# திருட்டு மோட்டார் சைக்கிளை பயன்படுத்திய துப்பாக்கிதாரிகள்

கல்கிசையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய துப்பாக்கிதாரிகள் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளில் வருகை தந்துள்ளனர் என பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி மோட்டார் சைக்கிள் ஹங்வெல்ல பகுதியிலிருந்து திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கிசை – வட்டரப்பல பகுதியில் கடந்த செவ்வாய் கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 36 மற்றும் 20 வயதான இருவர் உயிரிழந்தனர்.

துப்பாக்கிதாரிகள் இருவரும் தப்பிச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அதனடிப்படையில் துப்பாக்கிதாரிகள் வருகை தந்ததாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் அன்றிரவு ஹொரணை முனகம பகுதியில் வைத்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த மோட்டார் சைக்கிள் துப்பாக்கிதாரிகளால் பயன்படுத்தப்பட்டது என விசாரணைகளின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.






### சிங்கள இனவாதிகளிடம் இருந்து தமிழ்த் தேசியத்தைப் பாதுகாக்க

# தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட வேண்டும் அல்லது வீட்டுக்குச் செல்ல வேண்டும்!

## இப்படி வலியுறுத்துகின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் இரா.துரைரெட்ணம்

**(கனகராசா சரவணன்)**

சிங்கள இனவாதிகள் வடக்கு கிழக்கை ஆளுமை செலுத்தக் கூடிய தான நிலை மற்றும் கெடுபிடிகள் நிறுத்தப்பட வேண்டுமாயின் தமிழ் தேசியத்தை பலப்படுத்த தமிழ் தேசியத்தின் பால் அக்கறை கொண்டுள்ள கட்சிகள் அனைத்தும் ஓரணியில் சேருவதற்கான செயல்வடிவங்களை தமிழ் தலைமைகள் மேற்கொள்ள வேண்டும். அப்படி இல்லாத பட்சத்தில் நீங்கள் கட்சிகளை கலைத்துவிட்டு வெளியேறிப் போகலாம் என கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமாக இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள கட்சி காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

புதிய அரசாங்கம் உருவாகி மூன்று மாத ஆகிய நிலையில் 2025 ஒரு தேர்தல் ஆண்டாக பார்க்க கூடியதாக இருக்கின்றது. நீதிமன்றம் ஊடாக உள்ளூராட்சி தேர்தல் விரைவாக நடாத்தப்பட வேண்டும் என செல்லப்பட்டுள்ளதுடன் புதிய தேர்தல் ஆணைக்குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது

வடக்கு கிழக்கை பொறுத்தமட்டில் சிறுபான்மையாகிய நாங்கள் பல சதாப்தங்களாக பலவற்றை இழந்து எந்த அதிகாரமும் இல்லாமல் நடுத் தெருவில் நிற்கின்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது

42 வருடங்களுக்கு மேலாக தமிழர்கள் உரிமை தொடர்பான இந்தப் போராட்டத்தில் வடக்கு கிழக்கிலுள்ள ஒவ்வொரு தமிழ் குடும்பமும் அர்ப்பணிக்கப்பட்டு பல வடுக்களை தாங்கி விலைமதிக்க முடியாத இழப்புக்களை சந்தித்து நிற்கின்றது.

தேசிய இனவாதிகள் வடக்கு கிழக்கு மீது ஆளுமை செலுத்தக் கூடிய நிலை நிறுத்தப்பட வேண்டுமாயின் – சிங்கள இனவாதிகளின் கெடுபிடிகள் நிறுத்தப்பட வேண்டுமாயின் – தமிழர்களின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான விடயம் ஆளும் தரப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்த்துக் கொள்ளப்பட வில்லை என்பதை நாங்கள் அம்பலப்படுத்தப்பட வேண்டுமாயின் – எதிர்காலத்தில் நாங்கள் இந்த உள்ளூராட்சித் என்றாலும் சரி, மாகாண சபை தேர்தலாக இருந்தாலும் சரி, ஓரணியில் திரண்டால் மட்டுமே அது முடியும். எதிர்காலத்தில் தமிழர்களின் தேசியத்தை பாதுகாக்க முடியும்

அதேவேளை எதிர்காலத்தில் தமிழ்த் தேசியத்தை வளப்படுத்த வேண்டுமாயின் வடக்கு கிழக்கில் தமிழ் தேசியத்தின் பாலான கட்சிகள் ஒன்று சேர வேண்டும். அதை விட்டுவிட்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்காக, உள்ளூராட்சி தவிசாளர் பதவிக்காக, மாகாண சபை அமைச்சர் பதவிக்காக சேர வேண்டும் என்று இல்லை.

வடக்கு, கிழக்கிலுள்ள – தமிழ்த் தேசிய பார்வையிலுள்ள – தமிழ் கட்சிகள் ஓரணியில் திரண்டு எதிர்வரும் காலத்தில் தமிழ் தேசியத்துக்கான அதிகார பங்கீடு சம்பந்தப்பட்ட விடயத்தை உறுதி படுத்தக் கூடியவாறு ஒற்றுமைப் பட வேண்டும். இந்த அடிப்படையில் எதிர்காலத்தில் ஒன்று சேர்ந்து தமிழ் தேசியத்தை பலப்படுத்த நாங்கள் அனைவரும் உரிய செயல்வடிவங்களை மேற்கொள்ள வேண்டும்.

இல்லாத பட்சத்தில் அந்த கட்சிகள் கலைத்து விடுவதற்கான நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதை தெளிவாக கூறிக் கொள் விரும்புகின்றேன். – என்றார்.



# ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாட்டை வினைத்திறனுடன் மேம்படுத்தத் திட்டம்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செயற்பாட்டை வினைத்திறனுடன் மேம்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள நிதியமைச்சு, ஏற்றுமதி மற்றும் இறக்குமதி திணைக்களத்தினூடாக குறித்த திட்டத்துக்கான வசதிகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம் இந்த விடயம் தொடர்பில் இலங்கை வணிக சபையுடன் நிதி பிரதி அமைச்சர் ஹர்சன சூரியப்பெரும கலந்துரையாடியுள்ளார் என நிதியமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பல அரச நிறுவனங்கள் தங்களது சேவைகளை இணையத் தளத்தினூடாக மேற்கொள்கின்றன.

இதனூடாக ஏற்றுமதியாளர்களும் இறக்குமதியாளர்களும் அவ்வாறான அரச நிறுவனங்களுக்குச் செல்லாமல் தங்களது செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் நிதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# தேயிலை தொழிற்சாலையில் இருந்து தேயிலைத் தூள் திருடிய மூவர் கைது!

**(மஸ்கெலியா நிருபர்)**

தேயிலை தொழிற்சாலையில் தேயிலைத் தூள் களவாடிய மூவர் நேற்று மாலை கைது. சாமிமலை பகுதியில் உள்ள டீசைட் தோட்டத்தை சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தோட்ட முகாமையாளர் பதிவு செய்த பொலிஸ் முறைப்பாட்டை தொடர்ந்து இவர்கள் மூவரும் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டு நேற்று ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட வேளை தலா ஐந்து லட்சம் ரூபா சரீர பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் 20ஆம் திகதி டீ சைட் தோட்ட தொழிற்சாலையில் அதி விலை உயர்ந்த தேயிலை தூள் 25 கிலோ களவு போனதை தோட்ட நிர்வாகம் அறிந்து மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்தது..

அதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் போது அப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இருந்து அந்தத் தேயிலைத் தூள் பொதி மீட்கப்பட்டு, சந்தேக நபர்கள் மூன்று பேரும் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்ய பட்டவர்கள் நேற்று ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது சந்தேக நபர்கள் மூன்று பேரும் தலா ஐந்து லட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்கப்பட்டனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலையபொறுப்பதிகாரிபுஷ்பகுமாரதெரிவித்தார்.

# இந்தியா நம்பமுடியாத அளவு வேகத்தில் முன்னேறி வருகிறது

## பிரதமர் மோடி உரை



21 ஆம் நூற்றாண்டில் இந்தியா நம்பமுடியாத வேகத்தில் முன்னேறி வருகிறது என்றும் திறன்நிறைந்தவர்களுக்கான உலகின் தேவையை இந்தியா பூர்த்தி செய்யும் எனவும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஒடிசாவில் நடந்த 18 ஆவது வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கான மாநாட்டில் பிரதமர் மோடி மேலும் உரையாற்றுகையில்,

“21 ஆம் நூற்றாண்டில் இந்தியா நம்பமுடியாத வேகத்தில் முன்னேறி வருகிறது. இன்னும் பல தசாப்தங்களுக்கு உலகின் இளமையான, திறன்மிக்கவர்கள் உள்ள நாடாக இந்தியா திகழும். திறமையானவர்களுக்கான உலகின் தேவையை இந்தியா பூர்த்தி செய்யும். அதற்கான ஆற்றல் இந்தியாவிடம் உள்ளது.

உங்கள் அனைவரையும் பார்க்கும் போது எனக்கு மகிழ்ச்சியாக உள்ளது. உங்களிடமிருந்து எனக்கு கிடைத்துள்ள அன்பு மற்றும் ஆசீர்வாதத்தை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். இன்று உங்கள் அனைவருக்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன். உங்களால்தான் நான் தலைநிமிரும் வாய்ப்பு கிடைத்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் நான் பல உலகத்தலைவர்களைச் சந்தித்துள்ளேன். அவர்கள் அனைவரும் அவர்கள் நாட்டிலுள்ள இந்திய புலம்பெயர்ந்தோரைப் பாராட்டுகின்றனர். இதற்கு பின்னால் இருக்கும் முக்கியமான சமூக காரணம் நீங்கள் கொண்டுள்ள சமூக மதிப்புதான்.

நண்பர்களே உங்களின் வசதிக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். உங்களின் பாதுகாப்பும், நலனும் எங்களின் முன்னுரிமை. நெருக்கடியான காலங்களில் எங்களின் புலம்பெயர்ந்தோருக்கு, அவர்கள் எங்கிருந்தாலும் சரி அவர்களுக்கு உதவுவதை நாங்கள் எங்களின் பொறுப்பாக கருதுகிறோம். இது இன்றைய இந்தியாவின் வெளியுறவுக்கொள்கைகளில் ஒரு வழிகாட்டுதலாக மாறியுள்ளது.” – என்றார்.

# திராவிடத்தையும், பெரியாரையும் எதிர்ப்பதுதான் எனது கொள்கை

## சீமான் கூறுகின்றார்



“பெரியார் பற்றி பேசியதற்கு என்னிடம் சான்று கேட்டு நிற்கும் பெரியார் இயக்கத்தினர், பல்கலைக்கழக மாணவிக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக என்ன போராட்டம் நடத்தினார்கள்? திராவிடத்தையும், பெரியாரையும் எதிர்ப்பதுதான் எனது கொள்கை.”

– இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கருத்து தெரிவிக்கையில்,

“பெரியாரைப் பற்றி நாங்கள் கூறுவது பொய் என கூறுவது எப்படி? எதற்கு ஆதாரம் தேவை? நாங்கள் தான் ஆதாரத்தை வெளியிட்டு வருகிறோம். தமிழ் மொழி, நாயன்மார்கள், ஆழ்வார்கள், பக்தி இலக்கியம், வள்ளுவர், கம்பர், இளங்கோவடிகள் பற்றி அவர் கூறிய கருத்துகளே போதும்.

தமிழ் காட்டுமிராண்டி மொழி என்றார். எந்த மொழியில் அவர் பேசினார்? இந்த மொழியில்தானே பேசினீர்கள். நாங்கள் வெளியிட்டுள்ள ஆதாரம் போதவில்லையென்றால், பெரியார் எழுத்துகளை அரசுடைமையாக்கி விட்டு என்னிடம் ஆதாரம் கேளுங்கள், நான் தருகிறேன். உலகத்தில் எல்லா தேசிய இயக்கத்துக்கும் மொழிதான் முக்கியம். தமிழ் மொழியை தவறாக கூறியபோது, அவரின் கொள்கை, கோட்பாடு சரிந்துவிட்டது. பெரியார் எழுதிய நூல்களை வெளியிடுங்கள். வள்ளலார், வைகுந்தரை தாண்டி என்ன சமூக சீர்திருத்தம் செய்துவிட்டார்? நான் மாறி, மாறி பேசவில்லை. படிக்கும்போதுதான் தெளிவு வருகிறது.

திராவிடத்தையும், பெரியாரையும் எதிர்ப்பதுதான் எனது கொள்கை. ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் புதிய கல்வி கொள்கையை ஏற்றுக் கொண்டது, வீடுதோறும் கல்வி என பல விஷயங்களை செயல்படுத்தியுள்ளனர். அதை ஏற்கக் கூடாது என எதிர்த்தவன் நான். ஆளுநருடன் ‘டீ’ குடிக்கிறீர்கள், எதிர்த்து போராட்டமும் நடத்துகிறீர்கள். காலையில் மகனும், மாலையில் தந்தையும் பிரதமரை சந்தித்தது மாநில வளர்ச்சிக்கா?

என்னிடம் சான்று கேட்டு நிற்கும் பெரியார் இயக்கத்தினர் பல்கலைக்கழக மாணவிக்கு ஏற்பட்ட பாதிப்புக்காக என்ன போராட்டம் நடத்தினார்கள்? ஐ.பி.எஸ். கேடரில் உள்ளவர்கள் பேசவே கூடாது. இந்திய மீனவர்கள் சிறை பிடிக்கும் கொடுஞ்செயல் தொடர்கிறது. குஜராத்தில் மீனவர்களை கைது செய்யும்போது கடற்படையினர் விரட்டிச்சென்று மீட்டுள்ளனர்.

தமிழகம், புதுவை மீனவர்களை தொடர்ந்து சிறை பிடிக்கின்றனர். இதற்கு தீர்வு கச்சதீவை மீட்பதுதான். தமிழ்நாட்டுக்கு அதிகாரம் வந்த பின் இதே கேள்வியை என்னிடம் கேளுங்கள். நான் அதிகாரத்துக்கு வந்தால் என் மீனவர்கள் மீது கை வைக்க சொல்லுங்கள் பார்ப்போம்.” – என்றார்.



# உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்: 13 பேர் உயிரிழப்பு; 113 பேர் காயம்

உக்ரைனின் ஸபோரிஷியா நகரில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 13 பேர் உயிரிழந்துள்ளனர். 113 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலால் அப்பகுதியில் பொது போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பொதுமக்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸை இலக்கு வைத்துக் குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், காயமடைந்தவர்களில் 10 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.





# ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கும் மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கும் ரஷ்யா

ரஷ்யாவில் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கும் 25 வயதுக்குட்பட்ட மாணவிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கவுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

பிறப்பு விகிதத்தை அதிகப்படுத்துவதற்காக ரஷ்யா இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யாவில் கரேலியா மாகாணத்தில் 25 வயதுக்கு உட்பட்ட கல்லூரி அல்லது பல்கலைக்கழகத்தில் முழு நேர படிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மாணவிகள் ஒரு ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுத்தால், அவர்களுக்கு 100,000 ரஷியன் ரூபிள் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

இந்த புதிய சட்ட விதிமுறை படி, இறந்த குழந்தையைப் பெற்றெடுக்கும் மாணவிகளுக்கு இந்த தொகை கிடைக்காது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது



உடல் நலக்குறைவால் குழந்தை இறக்கும் பட்சத்தில் தொகை திரும்பப் பெறப்படுமா என்பன உள்ளிட்ட தகவல்கள் தெளிவுபடுத்தப்படவில்லை.

மேலும் ஊனமுற்ற குழந்தையைப் பெற்றெடுக்கும் நபர்களுக்கு இந்த விதிமுறை பொருந்துமா என்பனவற்றையும் இந்த சட்ட விதிமுறைகள் தெளிவுபடுத்தவில்லை.

கரேலியா மாகாணத்தைப் போலவே ரஷ்யாவின் பிற பகுதிகளிலும் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க இது போன்ற திட்டம் செயல்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



# லொஸ் ஏஞ்சலிஸ் பகுதியின் 6 பிராந்தியங்களில் காட்டுத்தீ

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸ் பகுதியில் உள்ள 6 பிராந்தியங்களில் காட்டுத்தீ பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த காட்டுத்தீ காரணமாக இது வரையில் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

அத்துடன், அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலிஸின் ஈடன் பகுதியிலிருந்து ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பாலிசேட்ஸ் மற்றும் அதனை அண்மித்த பகுதியில் உள்ள பொதுமக்கள் மறு அறிவித்தல் வரை குடிப்பதற்கும், சமைப்பதற்கும் கொதித்தாறிய அல்லது போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



பாலிசேட்ஸில் இரண்டாவது இரவில் மேலும் பல வீடுகள் தீக்கிரையாகியுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குப் போதுமான அளவு தண்ணீர் இல்லை எனத் தீயணைப்புப் படையினர் குறிப்பிட்டுள்ளனர்.









# இன்றைய ராசி பலன்கள் - 10.01.2025




இன்று சுமாரான செயல்களே நடைபெறும் சூழ்நிலை காணப்படும். உங்களுக்கு சாதகமான பலன்கள் காண நீங்கள் திட்டமிட்டு முயற்சி செய்ய வேண்டும். இதனால் சூழ்நிலை சீர்பெறும்.

உங்கள் பணியில் நன்மையான பலன்கள் காண கடினமாக போராட வேண்டும். என்றாலும் இறுதியில் வெற்றி நிச்சயம்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். உறவில் நல்லிணக்கம் காண பொறுமையான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை மேற்கொள்ளவேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

மூட்டு மற்றும் முதுகு வலியால் பாதிக்கப்படுவீர்கள். ஆரோக்கியமாய் இருக்க குளிர்ச்சியான உணவு வகைகளை தவிர்க்கவும்.




இன்று நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் பொறுமையான அணுகுமுறை தேவை. திட்டமின்றி செயலாற்றினால் இழப்புகள் ஏற்படலாம். உறுதியான அணுகுமுறை மூலம் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்காது. உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

சில விஷயங்களில் உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். அனுசரித்து போவதன் மூலம் உங்கள் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்வது கூட கடினமாக உணர்வீர்கள்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் நேர்மறை அணுகுமுறை மூலம் நீங்கள் வெற்றி காண்பீர்கள். உங்கள் அணுகுமுறையில் தைரியம் மற்றும் உறுதி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள்.

உங்கள் செயல்திறனில் உங்கள் திறமை வெளிப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே மகிழ்ச்சி நிலவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றலும் கணிசமாகஉயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது.




உங்களுக்கு சாதகமான நாள். இன்று புதிய மனிதர்களை சந்தித்து அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வீர்கள். புதிய நண்பர்கள் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு இது ஒரு நல்ல அனுபவமாக இருக்கும்.

கடின உழைப்பும் அர்ப்பணிப்பும் நல்ல பலன்களை பெற்றுத் தரும். பணியில் உற்சாகம் காட்டி வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இருவரும் சேர்ந்து இனிமையான நேரத்தை கழிப்பீர்கள்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்ல பணத்தை செலவிடுவீர்கள்.




இன்று விழிப்புணர்வும் எச்சரிக்கையும் தேவை. கோவிலுக்கு செல்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட வேண்டும். உங்கள் நன்மதிப்பிற்கு பங்கம் வரும் வாய்ப்பு உள்ளது. எனவே சிறிது விழிப்புடன் இருக்கவும்.

நீங்கள் உங்கள் துணையுடன் பிணக்கு கொள்வீர்கள். இந்தப் போக்கை தவிர்ப்பதன் மூலம் உறவில் நல்லிணக்கம் காண முடியும்.

இன்று நிதிநிலைமையில் அதிர்ஷ்டம் குறைந்து காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் சிறிது போராட வேண்டியிருக்கும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும் எண்ணெய் உணவு வகைகளை தவிர்த்தல் சிறந்தது.




இன்று சில தடைகளை சந்திப்பீர்கள். பொறுமையாக உங்கள் செயல்களைக் கையாளுங்கள். உணர்ச்சி வசப்படாதீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு கொள்ளாதீர்கள்.

இன்று அதிகப் பணிகள் காணப்படும். இன்று பணியில் காணப்படும் கடினமான சூழ்நிலைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பணப் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படாது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. இதனால் உங்களிடம் மகிழ்ச்சியின்மை காணப்படும்.

இன்று உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது. பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று வெற்றி காண்பதற்கு சாதகமான நாள். உங்கள் ஆர்வத்தை பெருக்கும் புதிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணியில் திருப்தி காணப்படும். உங்கள் சகபணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்லுறவு வளரும்.

நிதிநிலைமையில் ஸ்திரத்தன்மை காணப்படும். உங்கள் நிதி நிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று துடிப்பான நாளாக இருக்காது. எதிர்மறை விளைவுகளை தடுக்க பொறுமை மற்றும் எச்சரிக்கையான அணுகுமுறை தேவை. இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறப்பாக செயலாற்றுவதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவை தக்க வைத்துக் கொள்ள உங்கள் வார்த்தைகளில் கவனம் செலுத்துங்கள். இதனால் இருவரிடையேயான பிணைப்பு வலுப்பெறும்.

நிதிநிலைமை எதிர்பார்த்த வகையில் காணப்படாது. பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உரிய நேரத்தில் உணவை உட்கொள்ளவும். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்பட வாய்ப்புள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 10.01.2025




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண இன்று முயற்சி எடுக்க வேண்டும். உங்கள் பணிகளை நம்பிக்கையுடன் மேற்கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக செய லாற்றுவதற்கு சாதகமாக இருக்காது. உங்கள் கீழ் பணிபுரிபவர்களுடன் பிரச்சினை ஏற்படலாம்.

உங்கள் துணையிடம் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். உற்சாகமாக இணைந்து மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிக்க முயல வேண்டும்.

வரவும் செலவும் இணைந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்திற்காக மேற்கொள்ளவேண்டிய செலவு குறித்த கவலை காணப்படும்.

ஆரோக்கியம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. தோள் மற்றும் கணுக்கால் வலி ஏற்படலாம்.




இன்று மகிழ்ச்சியை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் பயனளிக் கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதக மாக இருக்கும். பணியை விரும்பி மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியாக உங்கள் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பங்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பண வரவும் லாபமும் காணப்படும்.

இன்று சிறப்பான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று பக்குவமாகவும் புத்திசாலித் தனத்துடனும் சூழ்நிலையைக் கையாள வேண்டும். இந்தப் போக்கு இன்றைய வேறுபாடுகளையும். அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் நற்பலன்கள் கிடைக் கும்.

பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும். பணிச்சுமை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

தகவல் தொடர்பில் ஏற்படும் பிரச்சினை காரண மாக உங்கள் துணையுடன் வேறுபாடு காணப்படும். இது உறவின் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை பலன் தரும் வகையில் அதிர்ஷ்ட கரமாக இருக்காது. பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

கண் எரிச்சல் உங்களுக்கு கவலையை ஏற்படுத் தும்.




இன்று மகிழ்ச்சிகரமான வாய்ப்பு காணப்படும். மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். என்றாலும் முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள் அல்ல.

உங்கள் திறமை மூலம் கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள். உங்கள் தன் னம்பிக்கை மூலம் சிறப்பாக செயலாற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதனால் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு பாத்திரமாகலாம்.

இன்று பண வரவுக்கான அதிர்ஷ்டம் காணப்படு கின்றது. பூர்வீக சொத்து வகையில் பண வரவு காணப்படும். இன்று கணிசமான தொகை சேமிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.



# கோண்டாவிலில் தம்மைப் பொலிஸ் எனக் கூறி ஐம்பதாயிரம் ரூபா ரொக்கப் பணம் கொள்ளை

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,ஜன.10

கோண்டாவில் பகுதியில் பய ணித்த பால்விநியோகத்தர் ஒருவரை வழி மறித்துத் தம்மைப் பொலிஸார் எனக் கூறி சோதனையிட்டவர்கள் அவரிட மிருந்து 50 ஆயிரம் ரூபா பணத்தை பறித்துக்கொண்டு தப்பியோடியுள்ள னர்.

யாழ்ப்பாணம் கோண்டாவில் பழனியாண்டவர் வீதியில் வசிக்கும் பால் விற்பனையாளர் ஒரு வார பால் விநி யோகப் பணத்தை பெற்றுக் கொண்டு நேற்று இரவு வீட்டை அண்மித்த சமயம் ஓர் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தாம் பொலிஸார் எனக் குறிப்பிட்டு சோதனையிட வேண்டும் எனக் கூறி பால் விற்பனையாளரை சோதணையிட்டுள்ளனர்.

இதன்போது பால் விற்பனையாளரின் பையில் இருந்த 50 ஆயிரம் ரூபா பணத்தை அபகரித்துக் கொண்டு இருவரும் தப்பியோடியுள்ளனர்.

இதுதொடர்பில் கோப்பாய் பொலி ஸில் மேற்கொள்ள்ச்ப்பட்ட முறைப் பாட்டையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் அப்பகுதியில் காணப்படும் சி.சி.ரி கமராக்களின் உதவியுடன் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.